[1st November 1962

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) No, Sir.

(*b*) Does not arise.

Flood control

* 1062 *Q*.—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Works be pleased to state whether there is any proposal for putting up revetments on both the banks of the Vaigai, in its course through Madurai City?

THE HON. SRI V. RAMAIAH : Proposals to provide *flood banks* and protective works including revetments for both the banks of the Vaigai river within the Madurai Muncipal limits have been sanctioned by the Government. The estimated cost of the proposals is Rs. 15 lakhs. The Madurai Municipality has agreed to bear 50 per cent of the cost of the work. The Scheme will be taken up soon for execution under the Third Five Year Plan.

திரு. வை. சங்கரன் : முனிசிபாலிடி காண்ட்ரிப்யூஷன் கொடுப்பதில் ஏதாவது கால தாமதம் ஏற்பட்டால் கூட, இந்தத் திட்டம் விரைவில் நிறைவேற்றப்படுவதற்குச் சர்க்கார் என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்?

THE HON. SRI V. RAMAIAH : The Madurai Municipal Council has agreed to bear 50 per cent of the cost.

SRI R. V. SWAMINATHAN : What is the extent of the area that will be covered?

THE HON. SRI V. RAMAIAH : It covers more or less the area within the Municipal limits.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் : மழை அதிகமாகப் பெய்து வெள்ளம் வரும்போது மதுரை நகரத்திற்குள்ளே மட்டும் பாதுகாப்பு நடவடிக்கை எடுத்தால் போதாது. வைகை நதியில் வெள்ளம் வரும்போது சோழவந்தானிலுள்ள சில ஏரிகளில் கூட தண்ணீர் அதிகமாக வந்துவிடுகிறது. ஆகவே, அப்பேர்ப்பட்ட பாதிக்கப்படக்கூடிய இடங்களிலும் கூட இந்தத் திட்டத்தை விஸ்தரிக்க அரசாங்கம் முன்வருமா?

கனம் திரு. வெ. ராமையா : எந்தெந்த இடங்களில் பாதுகாப்பு கொடுக்க வேண்டுமோ அவைகளைப் பற்றிய விவரத்தை இன்ஜினீர்கள் அல்லது சட்டசபை அங்கத்தினர்கள் அரசாங்கத்தினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதைப் பரிசீலனை செய்து பாதுகாப்புக் கொடுக்க திட்டங்கள் உருவாக்க முடியும்.

திருமதி பி. கே. ஆர். லக்ஷ்மிகாந்தம் : மதுரை முனிசிபல் லிமிட்டில் எவ்வளவு தூரம் பாதுகாப்பு நடவடிக்கை எடுப்பது என்று கணக்கிடப்பட்டிருக்கிறதா?

கனம் திரு. வெ. ராமையா : அந்த விவரம் இப்பொழுது என்னிடம் இல்லை.